## 79. துரத்துவோம் சாத்தனை துரத்துவோம்

**பல்லவி**

துரத்துவோம் சாத்தனை துரத்துவோம்
இயேசுவின் நாமத்தினாலே

**அனுபல்லவி**

*இயேசுவின் நாமத்தில் அதிகாரம் உண்டு*
*இயேசுவின் நாமத்தில் வல்லமை உண்டு*

**சரணங்கள்**

1. சாத்தானின் சகல வல்லமைகளை
மேற்கொள்ள அதிகாரம் தந்தார்
அவைகளால் நம்மை ஒன்றுமே
சேதங்கள் படுத்த முடியாதே
- துரத்துவோம்

2. சிலுவையில் ஜெயித்த இயேசுவின் நாமம்
சாத்தானின் தலையை நசுக்கிய நாமம்
இன்றும் வெற்றி சிறந்து நிற்கிறார்
தோல்வி என்பது நமக்கு இல்லையே
- துரத்துவோம்

3. சாத்தானின் அதிகாரம் சிலுவையிலே
அனைத்தும் தோற்கடித்து உறிந்துகொண்டார்
சத்துருவின் வாசல்களை சுதந்தரிப்போம்
இயேசுவே நம்முன்னே செல்கிறார்
- துரத்துவோம்